**தலைப்பு - 402 - கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஒக்டோபர் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய இராஜாங்க அமைச்சு என்பதால் சென்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் (ஏசீஏ-சீ மாதிரிப் படிவம்) மொத்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இராஜாங்க அமைச்சினால் தேறிய அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றை மொத்த அடிப்படையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தயவுடன் தெரிவிக்கின்றேன். | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 வருமானப் பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காகக் சேகரிக்கப்பட்ட ரூபா 2,716,902 ஆன வருமானம் அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 இன் 10.1 ஆம் பந்திக்கு இணங்க வழிகாட்டி இலக்கம் 6 இன் 7(ii) பந்தியின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கட்டு நிதியாக கருதப்பட்டு ஏசீஏ 3 மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் மாதிரிப் படிவத்தில் சேர்க்கப்படுகின்ற வருமானம் உள்ளடக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 அரச முற்பண “பீ” கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உறுப்பினர் கடன் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் 05 உத்தியோகத்தர்களின் ரூபா 611,184 ஆன இடர்க்கடன அறவிடப்படாததுடன் இக்கடன் அறவிடாமைக்கான காரணம், கடன் அறவிடப்படாத காலம், கடன் செலுத்தாமைக்கான காரணங்களை உள்ளடக்கி பெறக் கூடியதான கடன் முற்பண மிகுதிகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு பதிவேடொன்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்கடன் மிகுதி அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றவர்களின் அறவிட வேண்டிய கடன் மிகுதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இக் கடன் மிகுதியில் 2018 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தரின் அமைச்சில் செயற்படாத நிலுவைக் கணக்குகளில் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன் மிகுதியை அறவிடுவதற்கான அல்லது புத்தகங்களில் நீக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கடன் தவணைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் தலைப்பு இலக்கம் 194 இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய விளையாட்டு அறிவியல் நிறுவனம் மற்றும் விளையாட்டு மருத்துவ நிறுவனம் இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களுக்கு உரிய ரூபா 221,331,725 ஆன நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் ரூபா 231,690,858 ஆன முடிவடையாத வேலைகள் இந்த இராஜாங்க அமைச்சினால் கணக்காய்வுத் திகதி (2021 ஏப்ரல் 21) வரையில் கையேற்கப்படாமையுடன் அப்பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டு இவ்வருடத்திற்குள் கணக்கில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லாச் சொத்துக்கள் விரைவில் கையேற்கப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் மற்றும் நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி சரியாக உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்தினால் இராஜாங்க அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த 821 பொருட்பதிவேட்டு விடயங்கள் நிதிப் பிரமாணம் 751 மற்றும் 804 இன் பிரகாரம் பொருட் பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்பட்டு கணிப்பீட்டுச் சபை அறிக்கை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | பொருட்பதிவேட்டு பொருட்களின் பகுதிக்கான பெறுமதி பெறப்பட்டிருந்ததுடன் மிகுதிப் பொருட்கள் மதிப்பிடப்படுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இச்சொத்துக்களின் பெறுமதி புத்தகங்களில் உள்ளடக்கப்படும். | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சொத்து முகாமைத்துவம் மற்றும் கணக்கு வைத்தல் என்பன மேற்கொள்ளப் படல் வேண்டும். |

2. நிதிசார் மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய மூலதன ஒதுக்கங்கள் ரூபா 940,099,000 என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 554,799,270 மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய மூலதன ஒதுக்கங்களில் ரூபா 385,299,730 அதாவது நூற்றுக்கு 41 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | முன்னறிவித்தல் செலவுகள் மதிப்பீடொன்று இல்லாது ஒதுக்கங்கள் பெறப்பட்டிருந்தமையால் மற்றும் கொவிட் தொற்றுநோய் காரணமாக ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) செயற்பாட்டு செயற்திட்டங்கள் 1 இன் கீழ் மூலதன செலவு விடயங்கள் 02 மற்றும் மீண்டெழும் செலவு விடயங்கள் 10 இற்காக மேலதிக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த மையால் ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 132,024,592 ஆன மிகுதி அச்செலவு விடயங்களுக்கான தேறிய ஒதுக்கத்தில் நூற்றுக்கு 12 வீதத்திலிருந்து நூற்றுக்கு 94 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) 03 மூலதனச் செலவு விடயங்கள் மற்றும் 02 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,125,000 ஆன மொத்த தேறிய ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்படாமை, கட்டிடங்கள் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படாமை, வாகனங்கள் கொள்வனவு செய்யப்படாமை மற்றும் நி.பி 66, 69 இன் கீழ் ஒதுக்கங்கள் மாற்றப்படாமை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | போன்ற காரணங்களினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 02 இன் கீழ் 09 மூலதனச் செலவு விடயங்கள் மற்றும் 09 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மேலதிக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் ஒதுக்கங்களின் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 265,206,216 ஆன சேமிப்பு அச் செலவு விடயங்களுக்கான தேறிய ஒதுக்கத்தில் நூற்றுக்கு 10 வீதத்திலிருந்து நூற்றுக்கு 98 வரையான வீச்சில் காணப்பட்டது. | விளையாட்டு மருத்துவ நிறுவனம் மற்றும் விளையாட்டு அறிவியல் நிறுவனத்திறகான 02 செயற்திட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டமையால் சரியான படமொன்றைப் பிரதிபலிக்கவில்லை. மேற்படி (இ) மற்றும் (ஈ) இன் கீழ் உள்ள பதில்கள் பொருந்தும். | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்படாத எவ்வித பொறுப்பொன்றும் 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட முடியாத போதிலும் அதற்கு இணங்காது 2020 ஆம் ஆண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கான மொத்தம் ரூபா 4,455,999 இற்காக 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் | கொடுப்பனவுகளின் அளவு மற்றும் வீச்சுக்கள் தொடர்பான போதியளவு தகவல்கள் புதிய இராஜாங்க அமைச்சில் காணப்படவில்லை. எதிர்காலத்தில் பொறுப்புக்கள் குறித்துக் கொள்ளப்படுவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படும். | கடப்பாடுகளுக்கு உடன்படும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அச்செலவுகள் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | நி.பி 94(1) பந்திக்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டில் 09 செலவு விடயங்களுக்காக தேறிய ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 2,712,405 ஆன பொறுப்புக்களுக்காக உடன்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய இராஜாங்க அமைச்சொன்று என்பதால் வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அனுமானங்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அந்த ஒதுக்கங்கள் அனைத்து செலவுகளை மேற்கொள்வதற்கு போதியளவில் இல்லாமையால் மிகுதி ஒதுக்கங்களை விஞ்சியதான அளவில் 2021 ஆம் ஆண்டில் செலவுகளை மேற்கொள்வதற்கு ஏற்பட்டது. | - மேற்படி - |

**2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தரால் செய்யப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும் அம்முறைமையின் பயனுறுதி தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக பேணப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ள போதிலும், | பயனுள்ள நிதிக் கட்டுப்பாடொன்று உள்ளகக் கட்டுப்பாடொன்று பேணப்பட்டு வருவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு மேலதிகமாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் தலைமையில் வழமையான உத்தியோகத்தர்கள் மற்றும் பணிப்பாளர் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>குறிப்பிட்ட மீளாய்வு அறிக்கையின் பிரதி எதிர்காலத்தில் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அம்மீளாய்வு ஒன்று எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.. | |

## 2.4 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பண ‘‘பீ’’ கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் வேலை நீக்கம் செய்யப்பட்ட, ஓய்வூதியம் பெற்றுச் சென்ற,சேவையிலிருந்து விலகிச் சென்ற மற்றும் மரணித்த 05 உத்தியோகத்தர்களின் ரூபா 827,141 ஆன கடன் மிகுதிகள் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டன. | இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அறவிட வேண்டிய கடன் மிகுதி விரைவில் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 9,440,409 ஆன மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 65,653 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இரு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்பு மிகுதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | முன்னைய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம் - வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட 16 வாகனங்கள் இராஜாங்க அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அவ்வாகனங்கள் இராஜாங்க அமைச்சிற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.<br><br>அதற்கு மேலதிகமாக 2020 திசெம்பர் 31 இல் இராஜாங்க அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த 03 வாகனங்களுக்கான கிரயம் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களின் உரிமையை விரைவாக அமைச்சிற்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br>03 வாகனங்களின் கிரயம் கணக்கிடல் தொடர்பான முறையான சாட்சிகள் அமைச்சில் காணப்படவில்லை என்பதுடன் கிரயம் மீண்டும் மதிப்பிடப்பட்டு எதிர்காலத்தில் தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | வாகனங்கள் உரிமையை விரைவில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் வாகனங்களின் கிரயம் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |

## 4. நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இராஜாங்க அமைச்சு மற்றும் அதில் அடங்குகின்ற ஒரு நிறுவனமான தேசிய விளையாட்டு அறிவியல் நிறுவகத்தின் நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக இலக்குகள் நிறுவப்பட்டிருந்த போதிலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றமொன்று அடையப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவைப்படுகின்ற நீண்டகால தாக்கங்கள் அமைச்சு நிறுவப்பட்டு 04 மாதங்கள் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட 05 செயற்திட்டங்களின் அளவீடுகள் நடைமுறையில் இல்லாமையால் வெற்றியுடன் கூடிய முன்னேற்றமொன்று | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்று வதற்குத் தேவையான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்குத் தேவையான குறிப்பிட்ட இலக்கொன்றை |

| | | |
|---|---|---|
| அத்துடன் இராஜாங்க அமைச்சிற்கு உரிய விளையாட்டு மருத்துவ நிறுவகம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிறுவப்பட்டிருந்த ஒரு இலக்கொன்றை மாத்திரம் நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நூற்றுக்கு 65 வீதம் முன்னேற்றமொன்றை அடைந்திருந்தது. | காட்ட முடியாதுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட்ட செயற்திட்டம் Covid-19 தொற்று நிலைமையின் கீழ் திட்டமிட்டபடி செறய்படுத்துவதற்கு தடையாக அமைந்தது. | நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சு செயற்படுத்தப்பட்ட 2020 செப்டம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரையான காலத்திற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களுக்காக சாத்தியமான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாததுடன் 2021 யூன் மாதத்திலிருந்து உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிகப்பட்டுள்ளார். | குறிப்பிட்ட திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய் வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் விரைவில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் இராஜாங்க அமைச்சு மற்றும் அதற்கு உரித்தான விளையாட்டு மருத்துவ நிறுவகம் மற்றும் தேசிய விளையாட்டு அறிவாற்றல் நிறுவகத்தின் சிரேஷ்ட மட்டத்தில் 15 வெற்றிடங்கள், மூன்றாம் | வெற்றிடங்களை நிரப்புதல் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நடவடிக்கை என்பதுடன் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பணியாளர்கள் பற்றாக்குறையை ஆட்சேர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மட்டத்தில் 10 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்தில் 29 வெற்றிடங்கள், ஆரம்ப மட்டத்தில் 08 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக மொத்த வெற்றிட எண்ணிக்கைகள் 62 ஆகும். விளையாட்டு மருத்துவ நிறுவகத்தின் செயற்திறனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பணிப்பாளர் நாயகம், நிர்வாக அதிகாரி, மற்றும் தாதியர் மற்றும் தேசிய விளையாட்டு அறிவியல் நிறுவகத்தின் 10 விரிவுரையாளர் பதவிகள் உட்பட பணியாளர் பற்றாக்குறை நிலவுவதை அவதானிக்க முடிந்தது.